30

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாதாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஆம் மார்ச்சுமீ [நெ. 3.

MONTHLY JOURNAL OF 8 PAGES.

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

திருநெல்வேலியில் பயிராகும் "பொன்னாவிரை" அல்லது நிலாவிரை.

திருநெல்வேலியில் பயிராகிவரும் பொன்னாவிரையின் வரலாறு அநேக அரிய விஷயங்கள் அடங்கிய ஓர் இனியசரித்திரம். பொன்னாவிரை விளைவிக்கும் சமுசாரிகளுக்கும், நல்ல சரக்குடன் பிரயோஜனமற்ற வஸ்துக்களை கலந்து மிதமான சரக்குசெய்யும் தாரகர்களுக்கும், இதை ஏற்றுமதிசெய்யும் பெரிய வர்த்தகர்களுக்கும், சமுசாரிகளுக்கு உடந்தையாயிருந்து அவர்களை முன்னுக்கு கொண்டுவரவேண்டுமென்று அவர்களுக்கு அநுகூலத்தைதேட நோக்கம்கொண்ட விவசாய இலாகாதார், ஆகிய இவ்வளவு பெயர்களுக்குப் பொன்னாவரையின் விருத்தாந்தம் விசேஷ முக்கியமானது.

பொன்னாவிரை சிறுத்து வளரும் ஓர் குத்துச்செடி இதற்கு ஆதியில் ஏற்பட்ட சுதேச இடம் அரபியாதேசம். அரபியர்கள் மூலமாய்த்தான் காய்ந்த பொன்னாவிரை இலைகளை நாட்டுவைத்தியத்திலும் ஐரோப்பிய வைத்தியத்திலும் மருந்து சரக்காக உபயோகத்துக்கு கொண்டுவரப்பட்டது. கலவனில்லாமல் தனிசரக்காக கொள்முதல் செய்துவந்த காலம்வரை இதன் வியாபாரம் அரபியர்களை விட்டு வெளிபோகாமல் அவர்கள் கைவசமாகவே யிருந்தது. ஆனால் அவர்கள் எப்பொழுது பொன்னாவிரையுடன் உபயோகமில்லாத மற்ற இலைகளை கலந்து மோசடி சரக்கு செய்ய ஆரம்பித்தார்களோ அது முதல் அவர்கள் வியாபாரமெல்லாம் கெட்டு பாழாய்போயின. அதுமுதல் முக்கியமாய் இந்தியாவிலும் இஜிப்து தேசங்களிலுமிருந்துதான் ஏராளமான பொன்னாவரை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவந்தது. திருநெல்வேலியிலுண்டாகும் நிலாவிரை கலவனில்லாமல் சுத்தமாயும் சரக்கு வெகு

நேர்த்திபாயும், விலையும் குறைவாக இருந்தமையால், திருநெல்வேலி நிலாவிரைக்கு அதிக மதிப்பு ஏற்பட்டு உலகமெங்கும் கியாதிபெற்றிருந்ததென்று வாட்ஸ் என்பவர் கூறுகிறார். இதெல்லாம் பத்து வருஷங்களுக்கு முன்னால்தான்; அப்படியிருந்து 1915-ஹூத்தில் இப்பொழுது நடைபெறும் பெரிய ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் பொன்னாவரை சாகுபடியை திருநெல்வேலியில் அநேகமாய் நிறுத்திவிட்டார்கள். பொன்னாவரை சாகுபடியின் விஸ்தீரணம் திடீரென இவ்வளவு குறைந்து போவதற்கு காரணம் என்ன? அதின் உண்மை யாதெனில், அரபியா தேசத்து பொன்னாவரை முன் என்ன கதி அடைந்ததோ அதே கதி இந்தியா தேசத்து பொன்னாவரைக்கும் ஏற்பட்டது. சற்றும் யோசனையின்றி பிரயோஜனமற்ற இதர வஸ்துக்களை மட்டுக்கு மிஞ்சி பொன்னாவரையுடன் கலந்து வியாபாரம் செய்ததினால், ஐரோப்பிய வர்த்தகர்கள் இதுபோன்ற மோசடி சரக்குகளை எவ்வளவு குறைந்த விலைக்குவாங்கினபோதிலும் அவர்களுக்கு கட்டிவாராமல் நஷ்டமடைந்தார்களே யொழிய லாபமடைவதற்கு கொஞ்சம்கூட வழியில்லாமற்போனது. அது முதல் பொன்னாவரை சாகுபடிசெய்வதில் சமுசாரிக்கு கொஞ்சம்கூட லாபம் கிடைக்கக்கூடாதபடி அதன் விலை அவ்வளவு குறைந்துபோய்விட்டது. தற்காலம் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்ததும் பட்டாளத்து வைத்திய பண்டசாலைகளுக்கு அநேக மருந்துகள் அதிவராளமாய் வேண்டியிருந்தன. அவ்வளவு அதிகமாய் தேவையாயிருந்த மருந்து சரக்குகளில் பொன்னாவரையும் ஒன்று. ஆகவே 20 இராத்தல்கொண்ட ஒரு துவரம் பொன்னாவரை சரக்கின் கிரயம் சொற்ப அணாவிலிருந்து வெகு சீக்கிரமாக 8-ரூபாய் விலைக்கு வந்துவிட்டது. பொன்னாவரையின் விலை இம்மாதிரி அதிகமானதில் முந்திக்கொண்ட அநேக சமுசாரிகள் ஏதோ சொற்ப லாபம் சம்பாதித்துக் கொண்டார்கள். மறுபடியும் தரகர்களும் சில்லரை வியாபாரிகளும் அதிக நிறை இருக்கும் பொருட்டு பிரயோசனமில்லாத மற்ற இலைகளை தனிபொன்னாவரையுடன் கலந்து வியாபாரம் செய்யத்துணிந்து, அந்த சொற்ப காலத்திற் தறிப ஏதோ லாபத்தை அடைந்தார்கள். சற்றும் பின்யோசனையின்றி இவ்வாறு புத்தியீனமாய் செய்த செய்கையின் காரணமாக பொன்னாவிரையை இனிமேல் சாகுபடி செய்வதில் லாபமே கிடைக்கக் கூடாதபடி மறுபடியும் அதின் விலை அவ்வளவு குறைந்துபோய்விட்டது. சமுசாரிக்கு துலாம் ஒன்றின் பேரில் 8-ரூபாய் கிடைத்ததுபோய் அதற்குபதிலாக தற்சமயத்தில் 8 அணாதான் கிடைக்கிறது. பொன்முட்டை வைத்துவந்த

வாத்தை கொன்றதுபோலாயிற்று! ஐரோப்பிய வர்த்தகர்கள் இனிமேல் திருநெல்வேலி பொன்னுவிரையை கொள்முதல் செய்யாதபடி திருநெல்வேலி சரக்கின் மதிப்பெல்லாம் கெட்டு அவகீர்த்தியடைந்து இதன் வியாபாரமே அநேகமாய் நின்றுபோய்விட்டது. ஐரோப்பிய யுத்தம் நடக்கும் பரியந்தம் பொன்னுவ்வரைக்கு அதிக விலை கிடைக்குமென்று திருநெல்வேலி ஜில்லா சமுசாரிகள் எண்ணியிருந்தார்கள். சுத்தமான தனி சரக்காய்மட்டும் ஏற்றுமதி செய்திருந்திருப்பார்களேயானால் இன்னும் பொன்னுவரை பயிர்செய்து தகுந்தலாபம் சம்பாதித்திருக்கக்கூடும். அப்படியிருக்க தற்காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பொன்னுவரை சாகுபடியாகியிருந்தும், அதற்கு இப்பொழுது கிடைக்கும குறைந்த விலையின் காரணமாக, ஏராளமாய் பொன்னுவரை செடிகளை பிடுங்கி எறிகிறார்கள்.

இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கணக்கு வழக்கில்லாத வியாபார சம்பந்தமான விளைவு பொருட்களில் அநேகத்தின் முன் பின் வியாபார ஸ்திதியை ஒப்பிட்டுப் பார்த்தால், திருநெல்வேலி பொன்னுவரையைப்பற்றி மேலே கூறிய வரலாற்றை ஒத்திருக்கும். சில விளைவு பொருட்கள் உண்டாவதற்கு இந்தியாவைப்போல் அவ்வளவு வசமாய் அமைந்த தேசங்கள் வேறு ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் இந்தியாவிலுண்டாகும் அநேக விளைவு பொருட்களை ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு மிகவும் குறைந்தவிலைக்கே விற்கவேண்டியிருக்கிறது. இதற்கு ஏற்பட்ட ஒரே காரணம் யாதெனில் மற்ற தேசங்களைப் பார்க்கிலும் இந்தியாதேசத்தில் விளைவு பொருட்களுடன் பிரயோஜனமில்லாத மற்ற வஸ்துக்களை பலவிதமாய் கலந்து கெடுத்து மிதமான சரக்குகள் செய்யும் வழக்கம் அதிகமாயிருப்பதினால்தான் சர்க்கார் விவசாய இலாகாதாரும், ரெவினியு டிபார்ட்மெண்டார்களும், பஞ்சாபீஸ்காரர்கள் போன்ற ஏற்றுமதிசெய்யும் மற்ற பெரிய வர்த்தகர்களும் திருநெல்வேலிப் பருத்தியில் கலவனுண்டாவதை தடுப்பதற்கு தங்களால் கூடிய முயற்சி எடுத்துவருகிறார்கள். இப்படி அவர்கள் செய்யவில்லையானால் மிகவும் மேன்மையான திருநெல்வேலிப் பருத்தியிலும் கலவனுண்டாகி திருநெல்வேலிப் பருத்திக்கும் கூட பொன்னுவரைக்கு நேர்ந்த கதி கூடிய ஜல்தியில் சம்பவிக்குமென்று உறுதியாய் நம்பத்தக்கது.

திருநெல்வேலி பொன்னுவரைக்கு முன் ஏற்பட்டிருந்த நற்பெயரும் கீர்த்தியும் திரும்பி கிடைக்கும்படிசெய்ய இப்பொழுது எத்தனித்தல் மிகவும் பிந்திப்போன காரியம். ஆனால் இதன் நிமித்தமாகவாவது தாகர்களும் கலந்து பழுதான சரக்குகள்

செய்யும் மற்றவர்களும் தாங்கள் அவ்வாறு செய்வது தப்புஎன்று தெரிந்து இனிமேலாவது அப்மாதி செய்யமாட்டார்களென்று நம்புகிறோம்.

சுத்தமான வியாபாரம் செய்வதில் கிடைக்கும் லாபத்தை விட மோசடி வியாபாரம் செய்வதில் ஏதோ அந்த சமயமட்டுக்கும் சற்று அதிக லாபம் கிடைக்கலாம். ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும் என்ற பிரகாரம் ஏமாற்றி வியாபாரம் செய்யும் பிழைப்பு நிச்சயமாய் வெகுஜல்தியில் வெளிக்கு வந்துவிடும். சரக்குகளுக்கு ஏற்பட்ட மதிப்பும் நல்ல பெயரும் கெட்டுப்போகும். அவைகளின் விலையும மிகவும் குறைந்துபோய் அவைகளில் இனிமேல் வியாபாரம் செய்வதனால் கட்டிவராமல் கொஞ்சமேனும் லாபமில்லாமற்போகும்.

ஆர். தாமஸ்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
6-வது சர்க்கில், மதுரை.

மாடுகளுக்குச் சூடுபோடுதல் அழகா.

கால்நடைகளுக்கு சூடுபோடுதல்:—இவ்விஷயத்தைப்பற்றிச் சென்ற 1—3—18 மாலை 5-30 மணிக்கு, நீலத்தநல்லூரில் மிருக் வைத்தியத்தின் பொருட்டு தஞ்சைஜில்லாவில் சுற்றுபவரான மிஸ்டர் விநாயக முதலியார் ஓர் அரியப்பிரசங்கத்தைச்செய்தார். அச்சமயம் தாலூகாபோர்டு வைஸ் பிரஸிடெண்டு மிஸ்டர், எஸ். நடேசஅய்யர் பி. எ பி. எல். அக்கிராசனம் வகித்தார். தாலூகா போர்டு பிரஸிடெண்டு மிஸ்டர் சி. ஆ. ஸ்ரீநிவாசஅய்யங்கார் மற்றும் வியாபாரிகள் மிராசுதார்கள் மாடுகொள்ள வந்திருந்த எல்லோரும் சுமார் 200 பேர்கள் வரையில் வந்திருந்து மிக்க கவலையோடு கேட்டார்கள். பிரசங்கத்தின் முக்கியமான விஷயம்:— மாடுகளுக்கு சூடுபோடும் வழக்கத்தை நல்லதா, கெடுதலாவென்று யோசிக்காமல் பழையநாளில் செய்த முறைய அனுஷ்டித்து வருகிறார்கள். இவ்வழக்கத்தைப் பற்றி புஸ்தகங்களில் சூடுபோடுவதால் கால்நடைகள் வியாதியில்லாமல் சுகமாய் ஜீவித்திருக்கும் என்று சொல்லவில்லை. ஆனால் சூடு போடுவதால் மாடு திருட்டுப்போனால் கண்டுபிடித்துவிடலாம் என்று காரணம் சொல்லக்கூடும். அவ்வாறு கால்நடைகள் திருட்டுப் போகாமலிருக்கச் சாதகமாகப் போலீஸ் தந்திமுதலியவை நம் நாட்டில் நிறைந்திருக்கிறது. சூடுபோட்ட தோலுக்கு மதிப்பு குறைவதன்றி விலையும் கம்மியாகிவிடுகிறது. அவ்வாறு சூடு போட்ட

மாடுகளை மருந்திட்டுக்கொல்வதால் யாதொரு பிரயோசனமும் வியாபாரிகளுக் கில்லை. யுத்த நெருக்கடியால் சூடுபோட்ட தோலுக்கு பிரிசமே இல்லை. சிலர் அழகை உத்தேசித்து சூடு போடுகிறார்கள். போடுகிறவர்களுக்கு அழகுதான். ஆனால் வாயில்லா ஜீவனன்றோ சித்திரவதை செய்யப்படுகின்றது! தாறு மாறாக குணமுமில்லாமல், மாடுகளையும் ஹிம்சித்து, வியாபாரி களும் நஷ்டப்பட்டு, பிரயோஜனமில்லாத இந்த பரிதாபப்படத் தக்க கொடும் செய்கையை ஒழிக்கவேண்டும் என்று பேசி முடித் தார் அக்கிராசனாதிபதியும் பிரசங்கத்தை தாங்கிப் பேசி அவ் வாறு நம்மவர்களும் வியாபாரிகளும் சூடுபோடும் வழக்கத்தை யொழிக்கவேண்டும் என்றும் வற்புறுத்திப்பேசியபின் மீட்டிங்கு கலைந்தது.

கால்நடைகளைப்பற்றிய சில குறிப்புகள்

மாடுகளின் கொம்புகளை இளமையில் முளைக்காமற் தீப்ப பதும் அதன் காதுகளை அறுப்பதும்:— வாயில்லாத ஜீவன்களா யுள்ளவைகளுக்கு மேற்கூறிய அவயவங்களை கடவுள் அழகாய் அமைந்திருக்கும்படி அளித்திருக்கிறார் கொம்புகள் பாரங்களைச் சுமந்து மேட்டிலிருந்து இறங்கி வண்டிகள் செல்லும்போது தடுக் கக்கூடியதாய் இருந்து வருகிறது. விசேஷமாய் காதுகள் ஈ, கொசு, எறும்பு இவைகள் அணுகாமல் காக்கிறது. இந்த அவய வங்கள் கால் நடைகளுக்கு எவ்வளவு உபயோகமுள்ளவைகளாய் இருக்கின்றன. வென்று ஆலோசிக்கவேண்டும். காரணமில்லா மல் கொடூரமாக வாயில்லாஜீவன்களை ஹிம்சை செய்யக்கூடாது. உதாரணமாக நீலத்தநல்லூரில், சந்தையில் வந்திருக்கிற 1000க் கணக்கான மாடுகளின் கூட்டத்தைப் பார்க்கும் ஒவ்வொருவருக் கும், மாடுகள் கொம்புகளோடும் காதுகளோடும் இருப்பது எவ் வளவு அழகாயும், கண்ணுக்கு இனிமையாயுமிருக்கிறது. அவை களைப் பார்த்த எவரும் மேற்படி கடூரமான காரியத்தைச் செய்ய மாட்டார்கள். கொம்புகளை மாடுகள் இளமையாயிருக்கும்போ தே தீப்பதால் பலம் அவைகளுக்கு ஜாஸ்தி உண்டாகிவிடுவதாய் எண்ணுகிறதற்கு எள்ளளவும் ஆதாரமேகிடையாது ஒருநாளும் அப்படிச் செய்வதால் பலம் உண்டாகிறதில்லை. கொம்புகளைத் தீய்க்காமல் எவ்வளவு மாடுகள் பலசாலிகளாயும், கட்டுள்ளவை களாயும். சுறுசுறுப்புள்ளதாயும் இருக்கின்றதைப் பார்க்கிறோம். இந்தப் பரிதாபகரமான இரண்டு செய்கையும் தஞ்சை ஜில்லாவில் ஜாஸ்தியாக விருந்து வருகிறது. அதைப் பலரும் நிறுத்திவிட வேண்டியது அவசியமாகும்.

காய் அடித்தல்:— இது விஷயமாக நம் நாட்டில் மாடுகள் ஜாஸ்தியாக வேலைசெய்யவேண்டி காய் அடிக்கின்றார்கள். அதன் விதைகளை இரண்டு அழுத்தமான சம அளவுள்ள கழிகளைக் கொண்டு நசுக்கி சொல்லமுடியாத உபத்திரவத்தை மாடுகளுக்கு உண்டாக்குகிறார்கள் காய் அடிப்பதால் பலம் மாடுகளுக்கு இம்முறையில் பாதிகைகூடுகிறதாயினும் முழுமையும் திருப்தியாவதில்லை. மாடுகள் இவ்வாறு செய்தபின் 10 நாளுக்கு மேலாக பனியாகவுள்ள அதிகாலை நேரத்தில் தண்ணீரில் கட்டியும், மருந்துகள் போட்டும் பலவழியில் தொந்தரவுப்பட நேரிடுகிறது. இது முடிந்தபின் காளைகள் பசுக்களைக்கண்டு இச்சைப்படாமல் இருக்கிறதென்று சொல்லமுடியாது. மிருகவைத்திய இலாகாவின் முறைப்படிபோயென்றால், 'மாடுகளுக்கும், சொந்தக்காரர்களுக்கும் யாதொரு கஷ்டநஷ்டமுமின்றி மாடுகளின் விதைகளைக் கிழித்து வெளிப்படுத்தி அதிலுள்ள ரத்த நரம்பு நாடியில் மருந்தை உபயோகித்து மூன்றேதினத்தில் சௌகரியம் செய்துவிடலாம். இப்படிச்செய்த உடனேயே மாடு இரை நன்றாய் எடுக்கும் பழைய முறைப்படிபோவென்றால் 2 அல்லது 3 நாட்கள்வரையில் மாடு இரையே எடுப்பதில்லை. மேற்படி இலாகாவால் செய்யப்படுகிற சிகிச்சைக்குப் பின் பசுவினிடம் இச்சையே இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால் பழைய முறையில் மிகுந்த காலத்தை செலவு செய்யவும். கடுங்கஷ்டத்தையும் மாட்டிற்கு உண்டாக்குகிறது: இதை நம் நாட்டு ஜனங்கள் சிந்தனை செய்து, கிராமாதிகாரிகளுக்குத் தெரிவித்து தங்கள் மாடுகளுக்குக் காய் அடிக்க வேண்டினால், அவர்கள் தாசில்தாருக்குத் தெரியப்படுத்துவார். தாசில்தார் மிருக வைத்திய இலாகாத் தலைவருக்கு எழுதிவிடுவார். மிருகவைத்திய இலாகாத் தலைவர் விண்ணப்பதாருக்கு யாதொரு செலவுமின்றி மாட்டிற்கு சிகிச்சையை அவரவர்களிருக்கும் ஸ்தலத்திற்குப்போய் செய்துவருவார் இவ்வாறு சுலபமாயும், மிருகங்களுக்கு கஷ்டமில்லாமலும் சிகிச்சை செய்யும் பொருட்டு கவர்ன்மெண்டார் ஒரு மிருகவைத்தியசாலையைக் கும்பகோணத்திலும், மற்றவிடங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு முக்கிய மூலாதாரம் கால்நடைகளாதலால் அதுவிஷயமாய் கவலையோடு கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

சுதேசமித்திரன் 8—3—18

கம்பெனி பருத்தியும் புளிச்சைப் பருத்தியும்.

(பீப்ரவரிமீ 11-வது பக்கத்து தொடர்ச்சி.)

சம்சாரிகள் இந்த வருஷம் 20,000 எக்கருக்குக் குறையாத விஸ்தீரணத்தில் "கம்பெனிப்" பருத்தி விளைவித்திருக்கிறார்கள்.

குறைந்தபக்ஷம் எக்கருக்கு 10-ரூபாய் அதிகலாபம் கிடைப்பதாக வைத்துக்கொண்டு கணக்கிடும்பொருட்டு மேல் வருகிற பருவத்தில் திருநெல்வேலி ஜில்லா சம்சாரிக்கு கம்பெனி பருத்தி சாகுபடியில் 2-லக்ஷம் ரூபாய் லாபம் கிடைக்கவேண்டும். அதன் பின்வருகிற பருவத்தில் எவ்வளவுக் கெவ்வளவு "கம்பெனி" பருத்தி சாகுபடி விஸ்தீரணம் அதிகரிக்கிறதோ அவ்வளவு சரியான லாபமும் அதிகரிக்கும்.

இப்படியிருக்க, மட்டமான பருத்தியாகிய "புளிச்சைப்" பருத்தியை சம்சாரியானவன் இவ்வளவு ஆத்திரத்துடன் ஏன் விளைவிக்கவேண்டும்? இதன் காரணம் எளிதில் அறியக்கூடும். சாதாரண நாட்டுப் பருத்தியைவிட இந்தப் பருத்தியில் பஞ்சு கட்டுமானம் அதிகம் நாட்டுப் பருத்தியில் 100-க்கு 24 பஞ்சு என்றால் இந்தப் "புளிச்சையில்" 100-க்கு 33 பஞ்சாகின்றது. "புளிச்சைப்" பருத்தியின் ஜாஸ்தி பஞ்சு கட்டுமானத்தால் ஏற்படுகிற லாபத்தையெல்லாம் தரகன் அடைகிறான். அவன் சம்சாரிக்கு அதை விளைவிப்பதினிமித்தம் சொல்ப வெகுமதியைக் கொடுக்கிறான். இது இப்படியிருந்தாலும் இந்தத் தரகன்கூட இந்தப் பருத்தியை அசல் திருநெல்வேலியென்று புரட்டாய்ச் சொல்லி, வாங்குகிற வர்த்தகசாலைக்காரரை ஏமாற்றினால் மட்டும் லாபம் அடையமுடியும். "புளிச்சைப்" பருத்தி திருநெல்வேலிப் பருத்தியன்று "புளிச்சைப" பருத்தி வட இந்தியாவிலுண்டாகிற பருத்தி, 500 ராத்தல் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூபா. 1'9 விலையாய் இருக்கிறபொழுது திருநெல்வேலிப் பருத்திப் பஞ்சுக்கு ரூபா 200 விலையாயிருக்கிறது.

இந்த மட்டமான பருத்தியை தெரியாத்தனமாய் சம்சாரியானவன் பிடிவாதமாய் விளைவிப்பதனால் ஏற்படுகிற முடிவு யாதெனில் விலக்க முடியாதபடி அந்தப்பருத்தி ஏராளமாய்ப்பாவி திருநெல்வேலிப் பருத்தியின் விலைதானகவே குறைந்துபோய் தற்காலம் வங்காளப்பருத்திக்கிருக்கிற பாரம் ரூபா 160 வரையிலும் இறங்கிப்போகும்.

இந்தச்செய்தியை விவசாய இலாகாதார் விலைக்கு வாங்கும் வர்த்தகசாலைகள் அரசிறை இலாகா (ரிவினியூ) உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் நன்றாய்த்தெரிந்துகொண்டு ஒருங்கே சேர்ந்து திருநெல்வேலிப்பிராந்தியத்திலிருந்து இந்தப்புளிச்சைப் பருத்தியை அடியோடே வேரறுக்க வேண்டிய வழிகளைத்தேடிக்கொண்டிருக்கிறார்கள். பருத்திப் பஞ்சு வர்த்தகசாலைகளுக்குள் கொண்டுவரப்பட்ட புளிச்சைப்பருத்திக்கு ஒரு பைசாகூட கொடுப்பதில்லையென்று மேற்படி ஆபீசுகாரர் தீர்மானம் பண்ணிக்கொண்

டிருக்கிறார்கள். புளிச்சைப்பருத்தி சாகுபடி செய்வதால் விளையக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப்பற்றி சம்சாரிகளுக்கு வேண்டிய அளவு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. சம்சாரியினுடைய க்ஷேமத்தை உத்தேசித்தே தான் முக்கியமாய் நாம் பிரயாசைப் படுகிறோம் என்ற செய்தியைப் பூராவாய் சம்சாரி உணரும்வரை நம்முடைய பிரயத்தினம் காரியசித்தியடையாது. மற்ற நல்ல சம்சாரிகளுக்கொப்பந்தம் திருநெல்வேலி ஜில்லா ரயத்தும்தான் சுபானுபவத்தில் சிலாக்கியமானதென்று கண்டுகொள்ளும்வரை விவசாய விஷயமான விர்த்திகளில் சர்வ சந்தேகமுள்ளவனாக இருக்கிறான்.

சொல்ப நிலஸ்வான் ஆனதாலும் தன் பூமிகளின் சாகுபடியிலும் சீர்திருத்தங்களிலும் தானே நேராக சிரத்தையுடையவனாதலாலும், சுகவாச ஜீவியான நிலஸ்வானன்றி, ஹிருதயத்தில் குடியானவனாதலாலும் நியாயமான வழிகளைக்கேட்டு நடந்து கொள்ளக் கட்டுப்பட்டவனாகவே இருக்கிறான்.

இந்தக் குணவிசேஷம், திருநெல்வேலிப் பிராந்தியத்தில் முன்னமேயே நடந்திருக்கிற சீர் திருத்தங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் விவசாய இலாகாதாருடைய முயற்சிகள் கைகூடுவதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது.

ஆர். தாமஸ்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
6-வது சர்க்கில் மதுரை.

மணிலாக்கொட்டை வேர்க்கடலை பயிர்மாற்றி ஏன் சாகுபடி செய்யவேண்டும்.

(பிப்பரவரிமீ 15-வது பக்கதொடர்ச்சி.)

ஆகையால் கிருஷிகர் எல்லோரும் மணிலாக்கொட்டையை இடைவிடாமல் பயிர்செய்த இடத்திலேயே வருஷாவருஷம் பயிர் செய்து மேல் குறிப்பிட்டிருக்கும் கெடுதிகளை அனுபவிக்காமல் மணிலாக்கொட்டை பயிரிட்ட நிலத்தில் அந்த இடத்துக்கேற்ற தக்கலாபம் கிடைக்கக்கூடிய பயிரை மாறிமாறி பயிர்செய்துப் பலன் அடையவேண்டும்.

ஜே. செல்வரங்க ராஜு,
ஆக்டிங் விவசாய டிப்டி டைரெக்டர்,
4-வது சர்க்கில், பறங்கிமலை.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. C. R. Lakshmivaraha Ayyangar, B. A. B. L., and Mr. R. Srinivasa Ayyangar, B. A, for The Agricultural Association, No. 5. Cutchery Road, Kumbakonam.